DINAMALAR 27 NOV 2007

# மரக்கன்று நடும் விழா

**காரைக்குடி,நவ.27-**

காரைக்குடியில் ஈஷா யோகா மையம் சார்பில் பசுமைக்கரங்கள் திட்டத்தில் சிவகங்கை மாவட்டத்தில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் துவக்க நிகழ்ச்சி நடந்தது.

மத்திய நிதியமைச்சர் சிதம்பரம் மரக்கன்றுகளை நட்டு துவக்கி வைத்தார். கலெக்டர் பங்கஜ் குமார் பன்சால், சப்- கலெக்டர் தாரேஷ் அகமது, காங்., கமிட்டி உறுப்பினர் கார்த்தி, சுந்தரம் எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தனர். மைய நிர்வாக அறங்காவலர் ராஜ ரத்தினம வரவேற்றார். நகராட்சி தலைவர் முத்துத் துரை உட்பட பலர் பங்கேற்ற னர். ஒருங்கிணைப்பாளர் எத்திராஜ் நன்றி கூறினார்.